

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 322 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 17 – ஞாயிற்றுக்கிழமை 02 ஜூலை 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 322 : Thiruvalluvar Year - 2054 - Aani 17 - Sunday 02 July 2023 - Madurai 8 Pages ₹ 5.00


## முதலமைச்சரின் பரிந்துரையில்லாமல் அமைச்சர் செந்தில் பாலாஜியை நீக்கியது

# சட்ட விரோதம் - வரம்பு மீறிய செயல்!

## ஆளுநர் ரவிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில் கடிதம்!

**சென்னை, ஜூலை 2 –**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எழுதிய பதில் கடிதத்தில், முதலமைச்சரின் பரிந்துரையில்லாமல் அமைச்சர் செந்தில் பாலாஜியை நீக்கியது சட்ட விரோதம் என்றும், வரம்பு மீறிய செயல் என்றும், ஆணித்தரமாக குறிப்பிட்டுள்ளார்.**

**தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள பதில் கடிதம் வருமாறு: –**

வணக்கம்.

எனக்கு 29.06.2023 தேதியிட்டு, வி.செந்தில் பாலாஜியை எனது அமைச்சரவையில் இருந்து டிஸ்மிஸ் செய்வதாக தெரிவிக்கப்பட்ட உங்களது கடிதங்களில் ஒன்று இரவு 7.00 மணிக்கு கிடைத்தது. அதே நாளில் இரவு 11.45 மணிக்கு தற்காலிகமாக அதை நிறுத்தி வைக்கப்பட்டதாக சொல்லப்பட்ட மற்றொரு கடிதமும் எனக்கு கிடைத்தது. உங்கள் கடிதங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட வேண்டியவை என்றாலும், இந்தப் பிரச்சினையில் உள்ளடங்கிய உண்மைகள் மற்றும் சட்டம் ஆகிய இரண்டையும் தெளிவுபடுத்துவதற்காக இக்கடிதத்தை நான் உங்களுக்கு எழுதுகிறேன்.

**சட்ட ஆலோசனை பெறாமல் எடுத்த முடிவு சரியா?**

முதலாவதாக, அந்த இரண்டு கடிதங்களில் உள்ளவை குறித்து முதலமைச்சர் மற்றும் அமைச்சரவை சார்பாக எவ்வித உதவியும், ஆலோசனையும் கேட்கப்படவில்லை அல்லது அளிக்கப்படவில்லை என்பதை பதிவு செய்கிறேன். இரண்டாவதாக, அரசமைப்பு எந்திரத்தின் சீர்குலைவு, மறைமுக அச்சுறுத்தல் போன்ற வலுவான வார்த்தைகளைக் குறிப்பிட்ட முதல் கடிதத்தை நீங்கள் வெளியிட்ட சில மணிநேரங்களில், அரசு தலைமை வழக்குரைஞரின் கருத்தைக் கேட்பதற்காக அதைத் திரும்பப் பெற்றீர்கள். இது போன்ற முக்கியமான முடிவை எடுப்பதற்கு முன்பு நீங்கள் தக்க சட்ட ஆலோசனைகளைப் பெறவில்லை என்பதையே அது காட்டுகிறது. உள்துறை அமைச்சரின் தலையீடு இந்த விவகாரத்தில் சட்டக் கருத்தைப் பெற உங்களை வழிநடத்தியது என்ற நிலை, நீங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை கவனத்தில் கொள்ளாமல் அவசரமாக அவசரமாக செயல்பட்டுள்ளீர்கள் என்பதையே காட்டுகிறது. நான், எனது அமைச்சரவை மற்றும்



எங்களுடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவருமே இறையாண்மையின் இறுதி நிலையான மக்களின் நம்பிக்கையை பெற்றிருக்கிறோம். எங்களுக்குப் பின்னால் உறுதியாக உள்ள மாநில மக்களின் நம்பிக்கைதான் எங்களுடைய வலுவான சொத்தாக உள்ளது. எனவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு பிரதிநிதிகள் விஷயத்தை கையாளும் போது கவர்னர் போன்ற உயர் அரசமைப்பு அதிகாரிகள் கண்ணியத்துடன் செயல்பட வேண்டும். அதை விடுத்து, அரசியலமைப்பு எந்திரத்தின் சீர் குலைவு என்பது போன்ற ஆதாரமற்ற அச்சுறுத்தல்களை வெளிக்காட்ட வேண்டியதில்லை.

**எனது முந்தைய கடிதத்தை படித்திருந்தால் புரிந்திருக்கும்!**

இவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசின் அமைச்சர் வி. செந்தில் பாலாஜியின் நிலைமை குறித்து உங்களுடைய குறிப்பிட்ட கருத்துக்களுக்கு பதிலளிக்கிறேன். எனது 01.06.2023 தேதியிட்ட கடிதத்தை நீங்கள் படித்திருந்தால், 31.05.2023 தேதியிட்ட உங்கள் முந்தைய கடிதத்திற்கு எனது பதிலை படித்திருந்தால்,

(i) விசாரணையை எதிர்கொள்ளும் ஒரு நபருக்கும்

(ii) குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட நபருக்கும்

(iii) நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட ஒரு நபருக்கும்

உள்ள வித்தியாசத்தை நான் தெளிவாகக் கூறியிருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்.

ஏதேனும் குற்றங்களுக்காகவும், அத்தகைய தண்டனை மற்றும்/அல்லது இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பிறகு, சட்டத்தின் 8வது பிரிவின் துணைப் பிரிவுகள் (1), (2) மற்றும் (3) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியின்மை மூலம் தண்டனை அளிக்கப்படுகிறது. அந்த நிலையில் நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்ற உறுப்பினர் மீதான வழக்கில் சட்டப் பிரிவு 8 இன் துணைப்பிரிவு (4) மூலம் அவர்கள் காப்பாற்றப்பட மாட்டார் என்ற தீர்ப்பு அளிக்கப்பட்டாலும், அதற்கு

## அரசியல் சட்டத்தை மதிக்காமல் அடாவடி செய்யவா ஆளுநர் பதவி?

லில்லி தாமஸ் மற்றும் யூனியன் ஆப் இந்தியா, (2013) பிரிவு 7 உட்பிரிவு 653 என்ற வழக்கில், இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, மூன்றாம் நிலை வழக்குகளில் மட்டுமே ஒருவர் அமைச்சர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுகிறார். ஒய். பாலாஜி மற்றும் கார்த்திக் தேசரி & ஏ.என்.ஆர் என்ற வழக்குக்கான தீர்ப்பில் குறிப்பிட்ட சில தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்துக்களை மட்டுமே நீங்கள் சார்ந்துள்ள நிலையில், நான் தங்களது கனிவான பார்வைக்காக லில்லி தாமஸ் சம்பந்தமான வழக்கில் அளிக்கப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பை முன்மாதிரியாக குறிப்பிடுகிறேன்:

**குற்றம் நிரூபிக்கப்பட்டால்தான் ஒருவர் தகுதி நீக்கத்துக்கு உள்ளாவார்!**

“38. சட்டப் பிரிவு 8இன் துணைப் பிரிவுகள் (1), (2) மற்றும் (3) இன் கீழ், தகுதி நீக்கம் என்பது துணைப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் குற்றங்களுக்கு அதில் குறிப்பிட்டுள்ள கால அவகாசங்களின் படி தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இருப்பினும், சட்டத்தின் 8வது பிரிவின் துணைப் பிரிவுகள் (1), (2) மற்றும் (3) இல் குறிப்பிடப்பட்டுள்ள எதிராக சம்பந்தப்பட்டவர் தண்டனை மற்றும் அல்லது தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு அல்லது மறு சீராய்வு மனு தாக்கல் அரசியலமைப்புச் சட்டப்படி செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டது..”

குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்னரே தகுதியிழப்பு செய்யப்படும் என்று மேலே உள்ள பத்தி சந்தேகத்திற்கு இடமின்றி கூறுகிறது. வி.செந்தில் பாலாஜி, உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அமலாக்க இயக்குநரகத்தால் விசாரணைக்காக மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளார். இதுவரை அவர் மீது குற்றப்பத்திரிகை கூட தாக்கல் செய்யப்படவில்லை.

இப்போது, கிரிமினல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் ஒருவர் அமைச்சரவையில் தொடர்வது குறித்த கேள்வி, மனோஜ் நருலா மற்றும் இந்திய அரசு (2014) 9 SCC 1 இடையிலான வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு பெஞ்ச் அளித்த தீர்ப்பின் படி இனி எழ வாய்ப்பில்லை. தீர்ப்பின் தொடர்புடைய பகுதியும் உங்களது கவனத்துக்காக கீழே தரப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### அரசு பணியிடங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு முன்னுரிமை!

*சென்னை, ஜூலை 2 -*

*முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசுப் பணியிடங்களில் முன்னுரிமை வழங்குவது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளைத் தமிழக அரசு அரசாணையாக வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாணையில், “மனித வள மேலாண்மைத்துறையின் 2021 - 2022 ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை தொடர்பான உரையின்போது, அமைச்சர் (நிதி, மனிதவள மேலாண்மை) அவர்களால், வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசுப் பணியிடங்களில் பின்வரும் இனத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என சட்டமன்ற பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.*

*அரசு பணியிடங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகள், கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் மற்றும் தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதற்காக இவ்வரசாணை வெளியிடப்பட்டுள்ளது. முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்குவது தொடர்பான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளது” என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

### அமைச்சர் செந்தில் பாலாஜி பதவி நீக்க விவகாரம்:

## தமிழ்நாடு ஆளுநர் ரவியை குடியரசுத் தலைவர் நீக்க வேண்டும்!

### தேசியத் தலைவர்கள் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 2–

அமைச்சர் பதவியில் இருந்து செந்தில் பாலாஜியை நீக்கி உத்தரவு பிறப்பித்த தமிழ்நாடு கவர்னர் ஆர்.என். ரவியை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று தேசிய கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

தமிழ்நாடு அமைச்சரவையில் இருந்து அமைச்சர் செந்தில்பாலாஜியை நீக்கி நேற்று முன்தினம் இரவு கவர்னர் ஆர்.என்.ரவி உத்தரவு பிறப்பித்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பரிந்துரை இல்லாமல் கவர்னர் எடுத்த நடவடிக்கை அரசியல் சாசன சட்டத்தை மீறியதாக கூறி அனைத்து தலைவர்களும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தனது உத்தரவை வாபஸ் பெறுவதாக நள்ளிரவில் ஆர்.என்.ரவி அறிவித்தார். கவர்னரின் இந்த நடவடிக்கைக்கு தேசிய அளவிலும் கண்டனங்கள் குவிந்துள்ளன. அவரை கவர்னர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது. இதுபற்றி தலைவர்களின் கண்டன அறிக்கை வருமாறு: –

**மார்க்சிஸ்ட் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரி:** இந்திய அரசியலமைப்புச் சட்டம் எந்த அளவுக்குப் புதைக்கப்பட்டுள்ளது என்பது திகைக்க வைக்கிறது. நமது மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசை அழிக்கும் மோடி அரசு தோற்கடிக்கப்பட வேண்டும்.

**காங்கிரஸ் மூத்த தலைவர் மணிஷ் திவாரி:** தமிழ்நாடு கவர்னர் ஆர்.என். ரவியை ஜனாதிபதி உடனடியாக நீக்க வேண்டும். கவர்னருக்கு அவரின் வரம்புகள் எதுவும் தெரியவில்லை. இது போன்ற அரசியல் அமைப்பு விதிகளை மீறும் செயல்களை கவர்னர் செய்து இருக்கக் கூடாது. தனது பொறுப்புகள் என்னவென்றும் அரசியல் அமைப்பு பற்றியும் கவர்னருக்கு தெரியவில்லை என்பதையே அவரது நடவடிக்கைகள் காட்டுகிறது.

**தேசியவாத காங்கிரஸ் தலைவர் சுப்ரியா சுலே:** ஆர்.என்.ரவி தமிழ்நாடு கவர்னராக அல்ல, பா.ஜ.வின் கவர்னர் போல் செயல்பட்டு உள்ளார். அவரது நடவடிக்கை சர்வாதிகாரம். இதில் அரசியலமைப்பும் ஜனநாயகமும் எங்கே இருக்கிறது. தமிழ்நாட்டிலேயே இதுபோன்ற சம்பவம் நடக்குமானால், மற்ற மாநிலங்களிலும் நடக்கலாம்.

**மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் லிபரேஷன் பொதுச்செயலாளர் திபாங்கர் பட்டாச்சார்யா:** தமிழ்நாடு கவர்னர் ஆர். என்.ரவி மீண்டும் மீண்டும் தனது அதிகார வரம்பை மீறி, சாகசச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார். மோடி அரசில் அரசியல் சாசனம் மற்றும் கூட்டாட்சி கட்டமைப்பின் மீதான போர் நாளுக்கு நாள் அசிங்கமாகி வருகிறது. கூட்டாட்சி அமைப்பை அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மார்க்சிஸ்ட் பொலிட்பீரோ:** கவர்னரின் நடத்தை அரசியல் சாசனத்திற்கு எதிரான ஒன்று. தமிழ்நாடு அரசியலில் தலையிடுவது மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளிலும் தலையிட்டு மேலும் சில தவறான நடவடிக்கைகளை கவர்னர் ரவி எடுத்துள்ளார். அவர் கவர்னர் பதவியை வகிக்க தகுதி இல்லாதவர் என்று கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (2)

### ஜூலை 3 - அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று முன்பே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அறிவிப்பிற்கு ஏற்ப, ஜூலை 3 அன்றும் முரசொலி சிறப்பிதழ், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் எழுதியுள்ள கட்டுரைகளைத் தாங்கி, முரசொலியின் இணைப்பாக, வெளிவருகிறது.**

**— ஆசிரியர்.**